தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை

வியாழக்கிழமை, 1977, ஆகஸ்டு 4.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை **கூடியது.**

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

I. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

தொழில் நுட்பப் பல்கலைக்கழகம்.

*14. விரு. திரு. என். கிட்டப்பா

திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் தொழில் நுணுக்கப் பல்கலைக்கழகம் ஒன்றினைத் தொடங்கும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

(ஆ) இது குறித்து பல்கலைக்கழக மான்யக் குழு விதித்துள்ள நிபந்தனைகள் யாவை?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) இச் சட்ட முன்வடிவு குறித்து மைய அரசு, மாநில அரசு, பல்கலைக் கழக மானியக் குழு ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் மேலும் விவாதித்து முடிவெடுக்கும் பொருட்டு 12-8-1977 அன்று டில்லிக்கு வருமாறு மாநில அரசிற்கு மைய அரசு அழைப்பு விடுத்துள்ளது.

(இ) நிறுவப்பட இருக்கும் தொழில்நுட்பப் பல்கலைக் கழகம் தற்போது சென்னைப் பல்கலைக் கழகத்தின் கீழ் இயங்கி வரும் வேதியியல் துறை, தோலியல் துறை, நெசவு, கட்டிடயியல் மற்றும் நகல் அமைப்புத் துறைகளையும் தன்னகத்தே கொண்ட தனித்தியங்கும் பல்கலைக் கழகமாக இருத்தல் வேண்டும் எனக் கூறியுள்ளது.

[1977 ஆகஸ்டு 4

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, நமது தமிழகத்தில் இதுபோன்ற தொழில் நுணுக்கக் கல்லூரிகள் பல இருக்கின்றன. இவைகளை எல்லாம் ஒருங்கிணைத்து, தொழில் நுணுக்கப் பல்கலைக் கழகம் ஒன்றினை அனுமதிக்க வேண்டுமென்று கோரிக்கை பல ஆண்டுகளாக வைக்கப்பட்டு, பல்கலைக் கழக மானியக் குழுவும் பரிந்துரை செய்து, மத்திய சர்க்காரும் ஏற்றுக் கொண்டிருப்பதால், அதை விரைவில் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கிற எல்லாத் தொழில் நுட்பக் கல்லூரிகளையும் இணைக்க முடியாது. சென்னையில் இயங்குகிற தொழில் நுட்பக் கல்லூரிகளை இணைத்த தொழில் நுணுக்கப் பல்கலைக் கழகம் ஒன்றினை ஏற்படுத்தத்தான் 12-8-1977 அன்று விவாதிப்பதற்காக அழைப்பு வந்திருக்கிறது.

திரு. சி. ஆறுமுகம் : புதிதாக அமைய இருக்கிற தொழில் நுணுக்கப் பல்கலைக் கழகம், மாநிலத்தின் மையமான பகுதியில் அமைய அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இதுவரை நடந்துள்ள பேச்சுவார்த்தையின் அடிப்படையில், தொழில் நுணுக்கப் பல்கலைக் கழகம் கிண்டி என்ஜினியரிங் கல்லூரியை மையமாக வைத்து, சென்னை நகரில் இயங்கும்.

திரு. என். கிட்டப்பா : தமிழகத்தில் இதுபோன்ற தொழிற் கல்லூரிகள் எத்தனை இருக்கின்றன? இந்தத் தொழில் நுணுக்கப் பல்கலைக் கழகத்துடன் எந்தெந்த தொழிற் கல்லூரிகள் இணைக்கப்பட இருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்தத் தொழில் நுணுக்கப் பல்கலைக் கழகத்துடன் அழகப்பா காலேஜ் ஆப் டெக்னலஜி, மெட்ராஸ் இன்ஸ்டிட்யூட் ஆப் டெக்னலஜி சேரும். மாநிலத்திலுள்ள தொழில் நுட்பக் கல்லூரிகள் எவ்வளவு என்பதற்குத் தனியாகக் கேள்வி போட வேண்டும்.

திரு. சி. ஆறுமுகம் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற போது, இந்த தொழில் நுணுக்கப் பல்கலைக் கழகம் சென்னையில் ஆரம்பிக்க இருப்பதாகச் சொல்கிறார்கள். நெரிசல் மிக்க சென்னை

1977 ஆகஸ்டு 4]

நகரத்தில் இதனை ஆரம்பிப்பதற்குப் பதிலாக, மாநிலத்தின் மையப் பகுதியில் ஏற்படுத்த, மத்திய அரசிடம் வற்புறுத்த நம் அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பல்கலைக் கழகத்தை நாம் நினைத்த இடத்தில் ஆரம்பிக்க முடியாது. தொழில் நுட்பக் கல்லூரிகளை இணைத்து, சென்னையில் இதனை ஏற்படுத்தலாம் என்பதாக நிபுணர்கள் கொடுத்துள்ள ஆலோசனையின் அடிப்படையில் நிறுவ வேண்டியதாக இருக்கிறது.

திரு. ரா. உமாநாத் : மேற்படி பல்கலைக் கழகம் நிறுவும்போது மாணவப் பிரதிநிதிகளையும் இதில் சேர்த்துக் கொள்வதுபற்றி அமைச்சர் யோசிப்பாரா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இதுபற்றி மசோதா கொண்டுவருகிறபோது ஆலோசிக்கப்படும்.

திரு. என். கிட்டப்பா : அமைக்கப்பட இருக்கிற பல்கலைக் கழகத்திற்கு தொழிலறிஞர் ஜி. டி. நாயுடு அவர்கள் பெயர் வைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இதுபற்றி ஆலோசனை நடத்துகிறபோது யோசிக்கப்படும்.

திரு. க. அன்பழகன் : தொழில் நுணுக்கப் பல்கலைக் கழகம் ஏற்படுத்த வேண்டுமென்ற வேண்டுகோள் பற்றிய பரிசீலனை கடந்த மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக இருந்து வருகிற காரணத்தினால், அத்தகைய பல்கலைக் கழகம் உருவாவதற்கு அடிப்படையாக தொழில் நுட்பக் கல்லூரிகளுக்கு முதலில் தனித் தியங்கும் உரிமை (Autonomous status) வழங்கப்பட்டிருக்கிறதா? அல்லது முன்கூட்டி வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பல்கலைக் கழகம் விரைவில் துவங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தனித்தியங்கும் நிலைமை பொறியியல் கல்லூரிக்கு மட்டுமல்ல, கலைக் கல்லூரிக்கும் வழங்கப்படலாம் என்ற கருத்தா இருந்து வருகிறது. அதுபற்றியும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[1977 ஆகஸ்டு 4

திரு. மு. அம்பிகாபதி: தலைவர் அவர்களே, இந்த பல்கலைக் கழகம், நஞ்சையும் புஞ்சையும் கொஞ்சி விளையாடும் தஞ்சை மாவட்டத்தில் அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இந்தப் பல்கலை கழகம் பொறியியல் கொஞ்சி விளையாடுகின்ற இடமாக இருக்கின்ற சென்னையில் அமைக்க இப்போது உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே உறுப்பினர் அவர்களுடைய யோசனையை இப்போது ஏற்றுகொள்வதற்கில்லை.

திரு. யா. சை. மு. யூசுப்: பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக கிராமங்களிலிருந்து வருகின்ற மாணவர்கள் நகர்ப் புறத்திலிருந்து வருகின்ற மாணவர்களைவிடக் குறைவான I.Q. கொண்டவர்களாதலால் இந்த மாணவர்களுக்கு இடம் கிடைப்பதில்லை, நகரங்களிலுள்ள மாணவர்களுக்கு தான் அதிகமாக இடம் கிடைக்கின்றது. ஆகவே இதில் தனிக் கவனம் செலுத்தி இந்தக் கல்வி நிலையங்களில் கிராமத்திலுள்ள மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு முன் உரிமை வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பல்கலைக் கழகம் என்பது ஆராய்ச்சிகளை மேற்கொள்கின்ற இடம் தான். இருந்தாலும், கிராமத்தில் இருக்கின்ற நண்பர்களுக்குத் தேவையான ஊக்கம் அளிப்பதற்கு இதில் ஏற்பாடு செய்யப்படும்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, தமிழகத்திலே கோயம்புத்தூர் ஜில்லா பெரும் தொழில் வளர்ச்சியுள்ள இடமாக இருப்பதால் இந்த தொழில் நுணுக்கப் பல்கலைக் கழகத்தை கோவையில் அமைத்தால் மாணவர்களுக்கு உதவிகரமாக இருக்கும். பல ஐ. டி. ஐ., பல அரசு கல்லூரிகள் அங்கே இருப்பதால் அவற்றையெல்லாம் இணைத்துக் கொள்வதற்கெல்லாம் அங்கே அமைப்பது உதவியாக இருக்காதா, ஆகவே இதைப்பற்றி அரசு மறு பரிசீலனை செய்ய ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதைவிட நல்ல காரணம் கோவை நகரத்தில் மூன்று பொறியியல் கல்லூரிகள் இருக்கின்றன என்றும் சொல்லலாம். இதை அடிப்படையாக வைத்துக்கொண்டு பல்கலைக் கழகத்தை நிறுவிவிட முடியாது. என்சினியரிங் கல்லூரி போன்றவை, இடங்கள் போன்றவை எல்லாம் சென்னை நகரத்தில் வசதியாக உள்ளன என்ற அடிப்

படையில் சென்னை என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. மேலும் கோவையிலிருந்து வந்திருக்கின்ற நான் இதை உடனடியாக மாற்றுவது உசிதமும் அல்ல என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மிகவும் பின்தங்கிய மாவட்டமாக இருக்கின்ற காரணத்தாலும், திருச்சியில் பல தொழில் நுட்பப் பள்ளிகள், மின்சாரத் திட்டங்கள் போன்றவை இருக்கின்ற காரணத்தினாலும் இந்தப் பல்கலைக் கழகத்தை புதுக்கோட்டை மாவட்டத்தில் ஏற்படுத்த யோசிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதற்கான வாய்ப்பு இல்லை.

திரு. சி. ஆறுமுகம்: புதிதாக ஏற்படுத்தப்படும் பல்கலைக் கழகத்திற்கு சுயமரியாதை தந்தை பெரியார் அவர்களுடைய பெயரை வைப்பதற்கு அரசு ஆலோசிக்க முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இவையெல்லாம் இது நிறுவப்படும்போது ஆலோசிக்கப்படும்.

திரு. எஸ். ஆர். ராதா: இந்தப் பல்கலைக் கழகத்தை ஏற்படுத்தும்போது முக்கியமாக கைத்தறித் தொழிலைப்பற்றி ஆராய்ச்சி நடத்துவதற்கு அதில் ஏற்பாடு செய்ய அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இது என்ஜினியரிங் பல்கலைக் கழகம், பல தொழில் நுட்பங்களை இதில் ஆராய்ச்சி செய்யும்போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன ஆராய்ச்சிக்கும் வழிவகை செய்யப்படும் என்பதை நான் முதலிலே தெரிவித்திருக்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், புஞ்சையும், நஞ்சையும் கொஞ்சி விளையாடுகின்ற தஞ்சை மாவட்டத்தில் இதை அமைக்க வேண்டிய அவசியமில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். சேர, சோழ, பாண்டியன் காலத்திலிருந்து தொண்ட மண்டலம் பின்தங்கிய மண்டலமாக இருந்து வந்திருக்கின்ற வட ஆற்காடு மாவட்டத்தில் இந்தப் பல்கலைக்கழகம் அமைக்கப்படுமா?

[1977 ஆகஸ்டு 4

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: சென்னை நகரம் தொண்ட மண்டலத்தில்தான் இருக்கிறது என்று நான் கருது கிறேன். (சிரிப்பு).

திரு. சி. கோவிந்தராஜன்: இந்த தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தில் சேருவதற்கு-ஹயர் செக்கண்டரி படிப்புக்குச் சமமாக கருதப்படும் மெட்ரிக்குலேஷன் படித்தவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இது பல்கலைக் கழகம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது என்சினியரிங் கல்லூரிகளில் சேர்த்துக் கொள்வதைப்பற்றிக் குறிப்பிடுகிறார்கள் என்று நம்புகிறேன்.

திரு. ஆ. நடராஜன்: பேரவைத் தலைவர் அவர்களே, கோவையில் ஒரு பல்கலைக்கழகத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற ஒரு யோசனை இருந்து வந்ததே, அது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அது ஆலோசனையில் இருந்து வருகிறது.

THIRU M. A. LATHEEF: Instead of having technological courses which have close connections with instructions and engineering appliances, why not it be extended to courses which are called commercial technologies. Instead of having engineering technology, commercial technology (such as textile technology) is becoming more and more common and this is the case in other countries also. So this may be extended to commercial technologies also.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதைப்பற்றி கூறுகிறார் என்று விளங்கவில்லை. என்றாலும், இங்கு ஆரம்பிக்கப்படுகிற பல்கலைக் கழகத்தில் என்சினியரிங் அன்ட் ஸையன்ஸ் இரண்டு விஷயத்திலும் தனி முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டு, ஆராய்ச்சி வகுப்புகள் இருக்கும். இருப்பினும் இது நிறுவப்படும்போது எல்லாத் துறைகளிலும் ஆராய்ச்சியையும் நாளடைவில் கொண்டு வருவதற்கு முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படும்.

1977 ஆகஸ்டு 4]

(முற்பகல் 9-10)

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: அழகப்ப செட்டியார் அவர்களின் தீவிர முயற்சியினால் இன்றைக்குக் காரைக்குடியில் பல்வேறு கல்லூரிகள் இருக்கின்றன. எனவே, அங்கே அரசாங்கம் ஆலோசனை செய்து ஒரு பல்கலைக் கழகத்தை அமைக்க முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இப்போது பேசப்பட்டு வருகின்ற இந்தப் பல்கலைக் கழகம் சென்னையில் ஆரம்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, இது போன்ற டெக்னலஜிகல் யூனிவர்சிடி ஆந்திர மாநிலத்தில் மத்திய அரசாங்கத்தின் அனுமதி இல்லாமல், யு.ஜி.சி. யின் அனுமதியில்லாமல் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். எனவே, அதை வற்புறுத்தி அதற்கான முயற்சிகள் எடுக்கப்படுமா? அந்த முயற்சியை விரைவுபடுத்துவதோடு, யு.ஜி.சி. கிராண்டு மூலம் எவ்வளவு தொகை கிடைக்கும் என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: யு.ஜி.சி. கிராண்டுப் பணம் பேச்சுவார்த்தைகள் நடந்தபின் தான் தெரியும் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆந்திர மாநிலத்தைப் போல நாம் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். இதுவரையிலே நீங்கள் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதைக் கேட்காமல் கேட்டு, ஆந்திராவில் உள்ளதைப்போல் பல்கலைக் கழகம் ஆரம்பிக்க தக்க முயற்சியில் விரைவிலே ஈடுபடுவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஆந்திர மாநிலத்திலே ஆரம்பிக்கப் பட்டதைப்போல் அனுமதியில்லாமல் ஆரம்பிக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. அதைக்காட்டி, நாம் வற்புறுத்தி ஏன் ஆரம்பிக்க முயற்சி எடுக்கக் கூடாது என்றுதான் நான் சொன்னேன். அனுமதி இல்லாமல் ஆரம்பிக்கக் கூடாது. நான் சொன்னதை அமைச்சர் அவர்கள் தவறாகப் புரிந்துகொண்டார்கள்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: 12-ஆம் தேதி பேச்சுவார்த்தை நடக்கும்போது வற்புறுத்தப்படும்.